135

# இடம் பெயர்வுகள் இனி வேண்டாம்

ஓர் அவலத்தின் அனுபவப் பகிர்வு

THULIRGHAL
துளிர்கள்
NO.47, Martin lane
யாழ்ப்பாணம்



நா. துஷாந் எழுதியது

உ

# இந்து சமூகத்தின் ஆசிகள்

இடப் பெயர்வின் இன்னல்களைச் சித்தரிக்கும் இந்த நூலானது இடம்பெயர்வால் துன்பப்பட்ட நமக்கெல்லாம் ஓர் ஆறுதலைத் தருவதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த இளம் படைப்பினனின் முயற்சி மேன்மேலும் சிறக்கவும், இடம்பெயர்வுகளால் சொல்லொணாத் துன்பங்களைக் கண்டு, அனுபவித்த தமிழ் பேசும் மக்களின் மனத்துயரை இந்நூல் மூலம் தேற்றவும் எல்லாம் வல்ல எம்பெருமான் விநாயகப் பெருமானது இறையாசியை வேண்டி எதிர்காலத்தில் இந்நூலாளன் இன்னும் பல படைப்புக்களை ஆக்கி எழுத்துலகில் சிறந்து பிரகாசிக்க இறையாசி வேண்டி அமைகின்றேன்

லோஹோ சுஹேனோ பவந்து

யாழ்ப்பாணம். சிவஸ்ரீ. சிவசேகரக் குருக்கள்

# கிறீஸ்தவ சமூகத்தின் வாழ்த்துக்கள்.

மீசாலையைச் சேர்ந்த நா. துஷாந் என்பவர் பத்திரிகைத்துறையிலும், எழுத்துப் பணியிலும் ஆர்வம் மிக்க இளைஞர். பத்திரிகைகளுக்கு செய்திகளையும் சம்பவங்களையும் அனுப்பி பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்.

உன் கையில் உலகம் என்ற இவருடைய முதலாவது படைப்பை நான் படித்துப் பார்த்திருக்கின்றேன். கவிதையின் வடிவில் இலகுமொழியில் ஏதோ ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்ற உறுதியான மனதுடன் தெளிவாக, துணிவாக தான் விரும்பியதை சொல்ல முற்பட்டிருக்கிறார்.

இவருடைய இரண்டாவது படைப்பான "இடம்பெயர்வுகள் இனி வேண்டாம்" என்ற நூல் வெளிவருவது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியதொன்று பாராட்டுதற்குரியதொன்று. இவரின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இலைமறைகாயாக இருக்கும் இவருடைய திறமைகள் இனம் காணப்படவும் வெளிக்கொணரப்படவும் வேண்டுமென ஆசிக்கிறேன்.

தான் வாழும் சமூகத்தையும் அதன் அவலங்களையும் அனுபவங்களையும் ஆக்கங்களாகவும் சிறு வெளியீடுகளாகவும் கொணர்ந்து தனது அளப்பரிய ஆர்வத்தை ஒரு சிறியளவிலாவது நிறைவு செய்து கொண்டிருப்பவர் நா. துஷாந்.

"இடம்பெயர்வுகள் இனி வேண்டாம்" என்ற இவருடைய இந்தப் படைப்பு தான் அனுபவித்த அண்மைக்கால அவலத்தின் அனுபவப் பகிர்வுகளாய் அமைந்திருக்கின்றன. இம்முயற்சிக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் ஆசிகளையும் மனமகிழ்வோடு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொடர்ந்தும் தமது எழுத்துப் பணியை உறுதியோடு தொடரவும், தன்போன்ற பலருக்க அதன் வழி உறுதிகொடுக்கவும் இவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருள்திரு ரூபன். மரியாம்பிள்ளை**

பிரதம ஆசிரியர். பாதுகாவலன் பத்திரிகை, யாழ்ப்பாணம்

# இஸ்லாமிய சமூகத்தின் ஆசிகள்

சமாதானம், அதன் நிழல் எவ்வளவு சுகந்தமானது. இதமானது, மனித மனங்கள் ஆறுதல் பெறவல்ல ஜீவநிழல். ஆனால் யுத்தமோ அதன் துன்பங்கள் ஏராளம். அதன் அகோரமான துன்பங்களில் ஒன்றே இடம்பெயர்வு.

மக்கள் தாம் நேசித்த மண்ணை துறந்து அகதிகளாக, ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்படும் இந்த இடம்பெயர்வுகளால் மக்கள் இழந்துவிட்டவைகள் ஏராளம்.

மீசாலையூர் நா.துஷாந் அவர்கள் "இடம்பெயர்வு இனி வேண்டாம்" என்னும் தலைப்பில் நூல் ஒன்றை எழுத முனைந்திருப்பதை பாராட்டுகிறோம். தனது இச்சிறிய வயதிலேயே மக்களின் வேதனையை தன் பேனாவின் துணை கொண்டு உலகிற்கு உணர்த்தி நிவாரணம் தேட விளைந்திருப்பது அவரது துடிப்பான சமூக பற்றுக்கு ஓர் அழகிய சான்று. அவருடைய இந்த முயற்சிக்கு உயர்ந்த பெறுபேறுகள் கிடைக்க சர்வ வல்லமை மிக்க அல்லாஹ் தனது மேலான ஆசிகளை வழங்க பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

இவ்வண்ணம்

**மௌலவி. எப். எம். மொஹீத்தீன்**

# என் எழுத்துலகக் குருவின் வாழ்த்துக்கள்

இந்த எழுத்தாளர் நா. துஷாந் அவர்களின் இடம்பயர்வுகள் இனி வேண்டாம் என்ற அனுபவப் பகிர்வுக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வு அடைகிறேன். அனுபவம் என்பது முதுமையில் வருவது அல்ல. இளமையிலும் ஏற்படும் அனுபவம் ஆத்மார்த்தமானது. அதனைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதே அனுபவப் பகிர்வாகும். அவ்வகையில் வளர்ந்து வரும் எழுத்தாளர் என் அன்புக்குரிய தம்பி நா. துஷாந் அவர்களின் அனுபவப் பகிர்வு கற்பனையற்ற நிஜங்கள். அவை நிச்சயம் எம்மை வழிப்படுத்தும் - வரலாற்றில் ஓர் பதிவை ஏற்படுத்தும்.

உண்மையில் உலகம் என்ற கவிதைத் தொகுப்பைத் தந்த இளம் சிந்தனைக் கவிஞன் துஷாந்தின் எழுத்தாக்கங்கள் மென்மேலும் வியாபிக்க எனது வாழ்த்துக்கள். இவரது படைப்புக்கள் மீசாலையூர் தம்பியண்ணா என்ற புனைபெயரிலும் வெளிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எழுத்துலகில் சிறந்து மிளிர வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

அன்பன்

யாழ்ப்பாணம்.

ந. விஜயசுந்தரம்

ஆசிரியர்

# வாழ்த்துரைகள்

இந்நூலாக்கம் இடப்பெயர்வால் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களைத் தத்ரூபமாக வெளிக் கொணருகிறது. எதிர்காலத்தில் இப்படைப்பாளி குடத்துள் விளக்காக இன்றிக் குன்றின்மேல் விளக்காக மிளிர இறையருள் பாலிப்பதாக என்று உள்ளத்தால் வாழ்த்துகிறேன்.

**து. விநாயகமூர்த்தி**

சாவ. இந்துக் கல்லூரி. ஓய்வுபெற்ற ஆசிரியர்

---

நா. துஷாந், மீசாலையூர் தம்பியண்ணா என்ற பெயர்களில் எழுத்துலகில் மிளிரும் இந்நூலாளன் மீசாலை மண்ணிற்கு மேன்மேலும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

**ம. வைத்திலிங்கம்**

மீசாலை. ஓய்வுபெற்ற

கூட்டுறவு அதிகாரி.



# இங்கிருந்து இடம் பெயர்வோம்

ஆமாம் என் உள்ளத்திலிருந்து, என்னுரை, முகவுரை
ஈறு பலவாறு தலைப்படும் முன்னுரையைச் சற்று
ற்றினால் என்ன? என்று சிந்தித்தால் இந்நூலின் முன்னுரை
ற்படிதலைப்பில் அமைந்தது. இந்த வகையில் எமது ( தமிழ்
சும் மக்களது குறிப்பாக யாழ் மக்கள் வாழ்வியல்
ம்சங்களில் பின்னிப்பிணைந்து விட்ட - பிறப்பு, (இடம் பெயர்)
ழ்வு, இறப்பு பற்றி இங்கிருந்து சிந்திப்போம்.

இடம் பெயர்வு பற்றி இலங்கையில்
தவும் யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதுவதென்பது கொல்லர்
தெருவிலே ஊசி விற்பதற்கு ஒப்பானது. என்றாலும் எந்த ஒரு
டயத்தையும் நூலாக்கி, ஒட்டுமொத்தமாக பார்ப்பதில் ஒரு
து" இருக்கும் தானே....!

எனவே தான் ஆண்டிலும் அனுபவத்திலும்
கிமில்லாத அடியேன் ஏதோ இயன்ற அளவில் முயன்று
ம் பெயர் பயணத்தை பற்றி விவரிக்கப் புறப்பட்டேன் கம்பன்
ரம கதையை வடிப்பதை பாற்கடலை பூனை குடிப்பது என
யதும் அடியேன் இட்பெயர்வுகளை ஆராய (?) புறப்பட்டதும்
ாவு ஒன்று யான் கம்பனுக்கு நிகர் என்று கனவிலும்
ணிக் கூறவில்லை. ஏன் எவ்வளவு சிறிய அளவு கூட
ணவில்லை. பின் ஏன் ஒப்பிட்டேன் எனில் எங்கள் இடம்
யர் வாழ்வின் அவலத்தை கூறவே! ஆம் யானறிந்தளவில்
து வாழ்நாளிலேயே சுமார் மூன்று இடம் பெயர்வுகளைச்
தித்தேன். 1990,1995,2000 என்று தலா ஐந்து வருட
டவெளிகளில் என்றால் நீங்கள்... ?

எனினும் இவ் மாபெரும் இடப்பெயர்வுகளிலும்
நுபவிக்கப்பட்ட போதும் கடந்த மிலேனியம் இடம் பெயர்வு
றி (2000) இடப்பெயர்வு சற்று சிந்தித்துகண்டு கேட்டு
ணர்ந்து பெற்ற தகவல்களை உங்களுடன் பகிர்ந்து
ள்ளப் பிரியபட்டேன். இப்பணியில் ஈடுபட ஆரம்பித்து
த வருடம் அதை புனரமைத்தது இந்த வருடம் ஆகும்
றும் இன்றும் இம் முயற்சிக்கு பலர் ஆக்கமும் ஊக்கமும்
வேற்பும்தந்தார்கள் அரச/ அரச சார்பற்றசமய, பொது
மைப்புக்கள் பல தகவல்களை தந்து பல அன்புள்ளங்கள்
்வுடன் உதவினர். பாராட்டினர் சிரித்து சிலர் சலிக்காது, அலுக்காது
தரவளித்தனர்

கலெண்டர், டைபரி, நோட்டீஸ், பிரசாரப் புத்தகங்கள், படங்கள் என அப்பப்பா அவர்களின் ஆதரவு சொல்லும் தரமன்று அவர்களுக்கு அன்பனின் நீ..ண்..ட நன்றிகள் மறுபுறத்தே இதே முயற்சிக்கு தகவல்தேடிச் சென்று சிலஇடங்களில்( அரச/ அரச, சார்பற்று) சீறிச் சினந்து தரமறுத்து, அலைக்கழித்து ஏளனம் பண்ணி என்று சிரமமும் வேதனையும் தந்தவர்களின் பணியும் (?) சொல்லும்தரமன்று.(கொல்லும் தரம் எனலாம்) அப்பபா அவர்கள் பிஸியோ பிஸி அதுவும் பெண்மணிகள்.. அல்லிராட்சியம் தான் போங்கள்! அரட்டை அடிப்பார் தகவல்கள் தரார் (சிறந்த கடமை)இவற்றுக்கு இவர்களுக்கு 'அவர்கள் வரவால் பதில் கிடைக்கும் அதுவரையும் அம்மணிகளே ..அடியேன் ஆவலாக சவாலாக வெற்றி கண்டது போல் ஏனைய இளம் படைப்பாளிகளும் இருப்பாரோ வெல்வாரோ நானறியேன் எனவே அவர்கள் முயற்சிகளை முடக்க முயலாதீர். இதனை அறிந்தால் உங்கள் அதிகாரிகள் (வெளிநாட்டுப் பிரதிநிதிகள்) வேதனையுறுவார் நாம் முயல்வது இடம் பெயர் காலங்களில் செய்த உதவிகளை மக்கள் முன் வெளிக்கொண்டரவே .. இதற்குத் தடையா...

இப்படியாக இவையெல்லவற்றையும் தாண்டி பல அன்புள்ளங்கள் ஆசி, ஆதரவுடன் இம் முயற்சி தோல்விகளைக் கண்டு தளராமல் முன்னேறி இன்று வென்றாகி விட்டது பலத்த சிரமங்களுக்கு மத்தியில் படைக்கப்பட்ட இவ் ஆக்கத்திற்கு அன்பர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் நாடி வளரும் ஓர் இளம் எழுத்துலக படைப்பாளியை வரவேற்பீர்கள் என நம்பி அன்புடனும் நன்றியுடனும் விடை பெறுவது

நிரந்தர முகவரி : மீசாலை மேற்கு
தற்காலிக முகவரி : கொக்குவில் மேற்கு

அன்பன்
நா.துஷாந்


நூலின் பெயர் : இடம்பெயர்வு(கள்) இனி வேண்டாம்
ஆக்கியோன் : மீசாலையூர் நா. துஷாந்
வெளியீடு : 2002-04-07
படம் : நா.ஜீவன்
விலை : ரூபா 40.00

# இடம்பெயர்வுகள் இனி வேண்டாம்

ஆம் எமது இலங்கைத் திருநாடு இடம்பெயர்வுகளாலும் அதற்கு மூல காரணமான யுத்தத்தினாலும் மற்றும் பல இதர பிரச்சனைகளாலும் எத்தனையோ இன்னல்களை மிக மோசமான பின்னடைவுகளை எதிர்கொண்டது இன்றும் எதிர் கொண்டு வருகின்றது.

இவ் அவலம் நீண்டகாலமாகத் தொடர்வதால் பெருமளவு உயிர்ச்சேதங்கள், பொருட்சேதங்கள் மற்றும் அவை சார்ந்த பல இடர்களுடன் முழுநாடுமே சீரழிகிறது. இவையாருக்கு ஏற்பட்டாலும் அவர் மனிதர் என்ற ரீதியில் மிகவும் கொடூரமான துன்பத்தை அனுபவிக்க நேரிடுகிறது. இது மன்னிக்க முடியாததாகும்.

இந்த நிலை மாறவேண்டும். அழகிய சோலைகளும், நீர்ச் சுனைகளும், மலைகளும், மற்றும் பல அருங்கொடைகளுடனும் உலகப்புகழ் வரலாற்றுச் சின்னங்களுடன் இலங்கும் எம் இலங்கா புரியில் சிங்களர், தமிழர், இஸ்லாமியர், என இன, மத, மொழி பேதங்கள் மறந்து எல்லோரும் மதிப்புடனும், சிறப்புடனும், ஓர் குலமாய் ஒன்றாய் வாழும் நிலை வரவேண்டும். மீண்டும் எம் தாய் மண்ணில் ஏழை, பணக்காரன் என்றில்லாமல் எல்லோர் முகங்களிலும் புன்னகை தவழ வேண்டும். இன்றைய அசாதாரண சூழ்நிலை மாறி சமாதானம் மலர்ந்து அன்பும் அறனும் ஆட்சிசெய்ய வேண்டும். இதுவே பலரதும் ஆவா – அன்பனின் அவாவும் அஃதே.

இதை விடுத்து இன்று போல் இனியும் இந்த அவலங்கள் தொடருமாயின் .. இந்து சமுத்திரத்தின் "முத்து" என வர்ணிக்கப்படும் எம் இலங்கைத்தீவு நாளை இந்து சமுத்தரத்தின் "குப்பை" என வர்ணிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே அத்தகைய ஓர் தாழ் நிலைக்கு நம் தேசம் தள்ளப்படாமல் நாம் தான் பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்குப் பல தடைகள் காரணமாய் உள்ளதெனினும், பிரதானமாக போரும், அதன் பிரசவங்களான பலவுமே உள்ளன. இவற்றுள்ளும்

இடம்பெயர் அவலம் முன்னணேவசிக்கின்றது. பல விதமான பண்டங்களை கொண்டுள்ள இவ்வுலகம் இன்று சுருங்கி ஒரு சிறிய கிராமமாகிவிட்டது. பரந்து விரிந்து கிடக்கும் இப் புவி இன்று எந்த ஒரு மூலையிலும் உள்ள இடம்பற்றியானாலும், அல்லது அப்பகுதிமக்கள் பற்றியானாலும் அரை நொடியில் தொட்டு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் கணனியுகத்தில் மனித நாகரீகம் முன்னேறிவிட்ட உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் கூட நாமும் நாடும் இன்னும் பழைய பல்லவிகளையே பாடிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு உதவுவதற்காகவே அரிய பிறவியான மனித பிறவியை எடுத்துள்ளான். இந்த உண்மையை உணர்ந்து எத்தனையோ உலக நாடுகள் பிறருக்கு எத்தனையோ வழிகளில் உதவி மனிதாபிமானமுடன் விளங்குகின்றன. ஆனால் நாம் இன்னும் ஆசை, போட்டி என்று கொலை வெறிபிடித்து அலைவது மனித குலத்திற்கே ஒவ்வாதது. இந்த வகையில் பல வருடங்களாக எமது மண்ணில் போரின் காரணமாக நிகழும் இடம்பெயர்வுகள் பற்றி பார்க்கலாம்.

## இடம் பெயர்விற்கான காரணமும் இதுவரை இடம் பெற்ற இடம்பெயர்வுகளும்

இடம் பெயர்வு என்னும் போது பாரம்பரியமாக அல்லது நீண்ட காலமாக ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் இயற்கை செயற்கை அனர்த்தங்கள் நிகழும்போது தமது உயிர்களை காப்பாற்றிக் கொள்ள பிறிதொரு இடத்திற்கு பெயர்ந்து செல்லுதல் என்று வரையறுக்கலாம். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இயற்கை அனர்த்தங்கள் பெருமளவில் நடைபெறுவதில்லை. மாறாக செயற்கைப் போழ்வுகளால் அடிக்கடி இவ் இடம்பெயர்வு அவலம் ஏற்படுகின்றது. இன்னும் சுருங்கச் சொல்வதாயின் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே

இவ் அனர்த்தம் நிகழ்ந்து வருகிறது. அப்பகுதி மக்களை பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். இவற்றிலும் கூட எமது யாழ். குடாநாட்டிலேயே இத்தகைய பேரவலம் பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் எல்லா இடம் பெயர்வுகளுமே வேதனைக்குரியன. எனினும் 1990ம் ஆண்டு வடபகுதி முஸ்லீம் மக்கள் இடம் பெயர்ந்தமையும் 1995ம் ஆண்டு குடாநாட்டின் யாழ் மற்றும் வலிகாமப் பகுதி மக்கள் சுமார் ஐந்து இலட்சம் பேர் இடம் பெயர்ந்தமையும் மாபெரும் மனித அவலங்கள் ஆகும். அதுபோன்று இப் புதிய ஆயிரமாம் ஆண்டிலும் அதாவது 2000ம் ஆண்டு தென்மராட்சி மக்கள் இடம் பெயர்ந்தமையும் மிக வேதனைக்குரியதே.

## புதியதோர் ஆயிரமாம் ஆண்டிலும் இடப்பெயர்வு

இரண்டாயிரமாம் ஆண்டை சர்வ உலகமும் இன்பமுடன் கொண்டாடிக் கொண்டிருக்க ஏற்கனவே இடம்பெயர்ந்து இடர்பட்டுக் கொண்டிருந்த எம் உடன் பிறப்புகள் அகதி முகாம்களில் வாடிக்கொண்டிருந்தன. இந்த நிலையில் எமது தமிழ் மண்ணில் மீண்டுமோர் இடம்பெயர்வுக்கு இறைவன் அடித்தளமிட்டுவிட்டான். ஆம் மீண்டும் போர் நடவடிக்கைகள் உக்கிரமடையவே மக்கள் தென்மராட்சியில் இருந்து கையில் கிடைத்தவற்றுடன் புறப்பட்டனர். இப்படி நடக்கும் என்று எதையுமே வரையறுத்துக்கொள்ள முடியாத காலம் என்றாலும் எம்மவர்கள் சிலர் தீர்க்க தரிசிகள். இவர்களில் பலர் முன் கூட்டியே தமது பெரும் சொத்துக்களை தளபாடங்கள் வவசாய அறுவடைகள் மற்றும் விற்பனைப் பொருட்கள் என பலவற்றையும் பாதுகாப்பாக வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டனர். இப்படி நடக்கும் என்று கனவிலும் காணாத அப்பாவிகள் தெரிந்தும் அவற்றை எடுத்துச் செல்ல வசதியற்றவர்கள் செய்வதறியாது நின்றனர். நிலைமை மோசமடையவே ஏதோ முடிந்தளவு

கிடைத்ததை எடுத்துக் கொண்டு தமது தாய் மண்ணை — தாம் பிறந்து வளர்ந்த மண்ணை — அது நாள்வரை கூடிக் குலாவி ஒன்றாய் மகிழ்ந்திருந்த தம் உறவுகளை — அயல் நெஞ்சங்களை அழுதழுது பிரிந்து வந்தனர். இதிலும் சோகம் என்னவெனில் தமது கைக் குழந்தைகளையும் நடக்கமுடியாத முதியவர்களையும் தமது வாகனங்களில் ஏற்றி தேவையான உணவு உடை முதலானவையைக் கூட அப்படியே போட்டு விட்டு வந்தவர்களின் — வாகன வசதியின்றி அவர்களை அம்போ (?) என்று விட்டு வந்தவர்களின் கதை சொல்லும் தரமன்று. அதுமட்டுமன்றி ஒரு சந்தர்ப்பத்தில் இறுதிச் சந்தர்ப்பம் கிடைத்த இரு மணிநேர அவகாசத்தில் தமது உயிருக்கு நிகரான அடையாள அட்டைகளை விட்டும் வழியில் தவறவிட்டும் வந்தவர்களின் அவலங்களும் பரிதாபத்திற்குரியன. இவ்வாறு பல தரப்பட்ட துன்பங்களை எம் மக்கள் அனுபவித்த இடம் பெயர்வுகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அனுபவப்பட்டிருந்தனர். நாமும் இடம் பெயர்ந்தவர்கள் தான் எனினும் இந்நூலை சிறப்பிக்கும் பொருட்டு இது தொடர்பாக பல்வேறு பகுதியிலிருந்தும் இடம் பெயர்ந்த மக்களிடம் இதுபற்றி உரையாடிய போது கிடைத்த தகவல்களை இங்கு தருகின்றோம்.

## அப்பாவி மக்களின் கண்ணீர் கதைகள்

இந்த வகையில் யாம் முதலில் தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரியில் இருந்து இடம் பெயர்ந்த ஒரு குடும்பத்தவரைச் சந்தித்தோம். அவர் கூறிய சில விடயங்கள் கலங்காத கல் நெஞ்சங்களையும் கலங்கச்செய்து கரைத்துவிடும். கலங்கிய கண்களுடன் தன் சோகக் கதைகளை அவர் கூறுகையில் "நான் சாவகச்சேரி சிவன் கோவில் பகுதியில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தவன். இதற்கு முன்னும் பல இடம் பெயர்வுகளை சந்தித்த போதும் இதுவே எம்மை சோதித்துள்ளது. எனக்கு வயது முதிர்ந்த அம்மாவும் அப்பாவும் உள்ளனர்.

அவர்களுடன் நானும் எனது மனைவியும் எமது மூன்று பிள்ளைகளுடனும் கூலி வேலை செய்து வாழ்க்கை ஏதோ ஓட்டிவந்தோம். இந்த வேளை தான் 2000ம் ஆண்டு போர் தீவிரமாக எமது பகுதிக்கும் பரவ ஆரம்பித்தது. எமது சுற்று புறத்திலும் ஷெல்கள், குண்டுகள் வந்து வீழத் தொடங்கின. இதையடுத்து எமது அயலவர்கள் சிலர் தமது பொருட்களுடன் வேறு இடங்களுக்குச் சென்றனர். என்னிடம் பொருட்கள் என்று பெரிதாக எதுவும் இருக்கவில்லை. ஆனாலும் தாய் தந்தையரையும் பிள்ளைகளையும் நடத்திச் செல்ல முடியாது. எனவே என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று அருகில் இருந்த ஆலயம் ஒன்றில் எல்லோரும் இருந்தோம். எம்முடன் வேறு சிலரும் இருந்தனர். மறுநாள் எமக்கு மிக அருகில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கவே அவர்களும் போயினர். எம்மையும் வருமாறு கேட்ட போது எமது நிலைமை காரணமாக நாம் இருந்தோம். இரண்டு நாட்கள் இவ்வாறு பட்டினியும் பசியுமாக கழிந்தன. வெளியில் செல்ல முடியாத நிலை ஆலயமே தஞ்சம். பிள்ளைகளோ பயத்தில் அழுதனர். மூன்றாம் நாள் ஆயுதம் தாங்கிய சிலர் வந்து விசாரித்து விட்டு சில உணவுப் பொருட்களை தந்துவிட்டு வேறு இடம் செல்லுமாறு கூறினர். இதற்கு மேலும் இருக்க முடியாது என்பதாலும் எனது அம்மாவையும் அப்பாவையும் ஆலயத்தில் விட்டுவிட்டு தாங்கமுடியா வேதனையுடன் வர ஆயத்தமானோம். எமது வீட்டிலிருந்த சைக்கிளை எடுக்க முடியவில்லை. அதனால் உடுத்த உடையுடனே கைக்குழந்தையை எனது மனைவி தூக்க நான் சிறு உணவுப் பொருட்களையும் ஒரு குழந்தையையும் கொண்டுவர எனது மூத்த பிள்ளை நடக்க முடியாமல் நடந்து வந்தது. அதற்கு வயது நான்கு நாம் சாவகச்சேரியை அடைந்த போது நகரமே அதிரும்படி ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்தன. என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்ற வேளைதான் அந்தக் கோரம் நிகழ்ந்தது. ஆம் எனது கடைசி குழந்தையுடன் வந்த என் மனைவி மீது ஷெல் வீழவே ஐயோ.. அம்மா என்று அலறலும் குழந்தையின் கீச்சிடும் குரலுடன் அடங்கிய

அவர்கள் உயிர் சிதறுண்ட உடலுடன் எனதருகே தெறித்து வீழ்ந்தன. எதுவுமே செய்ய முடியாத நிலையில் எமதருகே வந்த இரு இயக்க உறுப்பினர்கள் எம்மை ஏற்றி சங்கத்தானை பாடசாலை வரை கொண்டு வந்து விட்டனர். எனது இரண்டு குழந்தைகளும் பயத்தால் விறைத்து விட்டன. என்னாலும் ஏதும் முடியவில்லை. தாங்க முடியாத துக்கத்துடன் அன்றிரவு நாம் அங்கேயே தங்கினோம். கனத்த இருளிலும் யுத்தத்தின் சத்தங்கள் ஓயாதபடி ஒலித்துக் கொண்டிருந்தன. மறுநாள் மீண்டும் நடைபோட்டு ஒருவாறு கொடிகாமமூடாக நெல்லியடிக்கு வந்து சேர்ந்தோம். இன்று தாயற்றிருக்கும் இரண்டு குழந்தைகளுடன் இங்கு ஒரு முகாமில் வசிக்கிறேன். அங்கு எனது பெற்றோர்கள் என்ன நிலையோ தெரியாது". என்று வெம்பியபடி எம்மிடம் கூறிய அவரது பெயர் கனகலிங்கம். அவரது இரு குழந்தைகளும் துன்பம் தெரியாது சிரித்தபடி விளையாடிக் கொண்டிருந்தன. இறைவனே தஞ்சமென்று நம்பிய இவர்களைக் கூட இறைவனால் ஒன்றாக வாழவைக்கவில்லை. எஞ்சிய இந்த ஜீவன்களாவது வாழவிடட்டும்.

## இழப்புக்கள் பலவிதம் அதில் இதுவும் ஒருவிதம்

இவர்களையடுத்து நாம் சந்தித்தது ஒரு பெண்மணியை. அவர் தென்மராட்சி மட்டுவிலில் இருந்து இடம் பெயர்ந்தவர். அவர் கூறுகிறார் "எனது பெயர் இலட்சுமி எனக்கு இரண்டு பிள்ளைகள் எனது கணவன் இறந்து பல வருடங்கள். ஊரில் நான் தையல் செய்து எனது பிள்ளைகளை படிப்பித்து வளர்த்து வந்தேன். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வயது வந்த பிள்ளைகள். நாம் இடம் பெயர்ந்து வரும் போது எனது மூத்த பிள்ளையை (ஆண்) எங்கிருந்தோ வந்த துப்பாக்கி குண்டு ஒன்று பறித்துவிட்டது. நானும் மகளும் அதே இடத்தில் எனது பிள்ளையை ஒரு பங்கருக்குள் தள்ளிப் போட்டு மூடிவிட்டு

தாங்க முடியாத துயருடனும் இனிமேல் எமக்கு யார் துணை? என்று ஏக்கத்துடனும் போலும் நிக்க முடியாததால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வலிகாமம் வந்து சேர்ந்தோம்." என்று கண்ணீரும் கம்பலையுமாக நாதழுக்க கூறினார்.

## பளைப்பகுதி வியாபாரி துயரைப் பகிர்கிறார்

இவர்களையடுத்து நாம் நேர்கண்டது பளைப் பகுதியை சேர்ந்த ஒரு வியாபாரியை. அவர் செபஸ்ரியன் — பளை இத்தாவில் என்று தன்னை அறிமுகப்படுத்திவிட்டு கூறுகையில் — "நான் பளை சந்தைப்பகுதியில் பலசரக்கு கடையொன்று வைத்திருந்தேன். எனது மனைவி மரியாள் மற்றும் நான்கு பிள்ளைகளாக ஏழுபேர் கொண்ட எமது குடும்பம் எனது உழைப்பை மட்டுமே நம்பியிருந்தது. எனது சீதன காணி மற்றும் நகை பணம் என்பவற்றையே முதலாக்கி நான் கடைபோட்டு நடாத்தி வந்தேன். பிரச்சினை மீண்டும் ஆரம்பமாக முதலில் சாவகச்சேரி பகுதிக்கு செல்லும்படியான அறிவித்தலையடுத்து நாம் எனது உறவினர் ஒருவரின் வீட்டிற்கு வீட்டுப்பொருட்களை விட்டு கடைப்பொருட்களையே ஏற்றிச் சென்று தங்கியிருந்தோம்.

சில மாதங்கள் கழிந்தநிலையில் சாவகச்சேரியிலிருந்து மீசாலைப் பகுதிக்கு செல்லும்படியான அறிவித்தலையடுத்து அங்கும் பல சிரமப்பட்டு எமது பொருட்களுடன் சென்று ஒரு வீட்டில் தங்கினோம். அங்கு இரண்டு வாரங்கள் தான் இருந்திருப்போம். அங்கிருந்தும் வெளியேறும்படி அறிவிப்பு வர எம்மால் முடியாமற் போய் விட்டது. அப்படியே இருந்தோம். என்ன செய்வதென்று தெரியவில்லை. அவசரத்திற்கு எந்த வாகனமும் கிடைக்கவில்லை எப்படியும் வசதியும் இல்லை. மறுநாள் நிலைமை மோசமடையவே வீட்டினர் பயத்தில் வற்புறுத்தவே எமது சொத்துகளை விட்டுவிட்டு வந்தோம். பின் சரியாக ஒரு மாதம் கழித்து நாமிருந்த வீட்டிற்கு போய் பார்த்த போது அவ்வீடு பெரும் சேதத்துடன் காணப்பட்டது.

அத்துடன் எனது கடைப்பொருட்கள் எவையுமே காணப்படவில்லை. சுமார் இரண்டு லட்சம் பெறுமதியான பொருட்கள். வானமே இடிந்து வீழ்ந்ததுமாயிருந்தது. என்ன செய்வது விதியை நொந்தபடி வந்து சேர்ந்தோம். இப்போது நெல்லியடியில் இருக்கும் நான் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்கிறேன். அது கூட என் மனைவியின் கழுத்திலிருந்த என் கையால் கட்டிய தாலி (மாங்கல்யம்)யைக் கழற்றி அடைவு கூடவைக்க முடியாமல் மிகக் குறைந்த விலைக்கு விற்றுத்தான். அப்படியிருந்தும் வருமானம் பக்காது எல்லாம் விலைக்கு வேண்ட வேண்டிய நிலை" என்று கூறி முடித்த போது அவரது கண்கள் குளமாகியிருந்தன.

## தெய்வமே துணை என்று ஏங்கும் ஏதிலிகள்

இவர்களது சோகங்களில் பங்கெடுத்துக்கொண்டு அடுத்து நாம் சந்தித்தது ஓர் கூலித்தொழிலாளியை. அவர் பெயர் ராமசாமி. வயது முதிர்ந்த – உழைத்து உரமேறிய உடல் கட்டுடன் வெறும் மேலுடன் காட்சி தந்த ராமசாமி கூறுகிறார். ஓடுறம் ஓடுறம் தம்பி அப்ப இருந்து ஓடுறம் எப்ப ஓட முடிக்கின்றோமோ தெரியேல்ல. நாங்கள் கச்சாயில் இருந்தனாங்கள். சனம் முதல் வெளிக்கிட்டகையே வெளிக்கிட்டோம். எங்களிட்டை என்ன கிடக்குது. இருக்கிற வீடும் கொட்டில் தான். சாப்பாட்டுச் சாமான் மற்ற உடுப்பு ரெண்டும்தான். அதுவும் ஆள் ஆளுக்கு கையில கொண்டு வெளிக்கிட்டம். அங்க ஊரில கூலிக்கு போறது நாலு பேர். எங்கட வீட்டில வடிவா சாப்பிட்டு இருந்தோம். இப்ப இங்க ஒரு தொழிலும் இல்லை. நிவாரணம் தான் ஒரே ஒரு வருமானம். அதுவும் பக்காது. வீறகில இருந்து தண்ணீர் வரை கஷ்டம். பொடியளின்ர படிப்பும் வீணாச்சு. வீட்டில சும்மா கிடக்குதுகள். என்ன செய்கிறது. எல்லாம் அந்த கண்ணகையம்மா கண் திறக்கவேணும். என்று கச்சாய் கண்ணகையை

வேண்டிக்கொண்டார். இப்படித்தான் எல்லோரும் தம் இஷ்டப்பட்ட தெய்வங்களை வேண்டிக்கொள்கின்றனர். திக்கற்றவர்களுக்கு தெய்வங்கள் தானே துணை. எம்மதமும் சம்மதமே என்று எல்லோரும் ஒன்று பட்டு போரே நீ போ என்றும், குண்டு மழை எமக்கு வேண்டாம், அன்பு மழை பொழியுங்கள். என்றும் அன்றாடம் வேண்டுகின்றனர்.

இவ்வாறு பலரையும் சந்தித்தவுடன் ஒரு சில பாடசாலை மாணவர்களையும் சந்திக்க விரும்பினோம். அவர்களின் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு மாணவன் கூறுகின்றான். நான் சென்ற வருடம் சோதனை எடுத்தனான். எங்களது ஊர் நுணாவில். அங்கு பெருமளவு பாதிப்பு ஆரம்பத்திலேயே அதிகமானதால் எமது பாடப்புத்தகக் கொப்பிகளை எடுக்க முடியவில்லை. இங்கு வர வெளிக்கிட்டபோது எமது பரீட்சைக்கு இரண்டு மாதங்களே இருந்தது. வந்து வீடு எடுத்து இருக்க ஒரு மாதம் போட்டுது. மிச்ச ஒரு மாதமும் ரியூசனும் இல்லாம படிச்சும் என்னால A / L பாஸ் பண்ணக் கூட ஏலாமல் போய்விட்டது. நாங்கள்தான் எல்லாம் இழந்து படிப்பையும் விட்டுட்டம். உங்களுக்கு (எமக்கு) இன்னும் கொஞ்சக் காலமாவது கிடக்கு விளையாடாமல் படியுங்கோ என்று சோகம் நிறைந்த படி கூறினார்.

## மாணவர்களின் ஈடு செய்ய முடியாத இழப்பு

இவரைப்போலவே கா/பொ/த. உயர்தரப் பரீட்சை **(2000)** இல் சித்தியடைந்த – ஆனால் பல்கலை அனுமதி பெறத் தவறிய ஒரு மாணவியும் கூறினார். அவர் சங்கத்தானையைச் சேர்ந்தவர். அவர் கூறுகையில் எனது பெயர் நிர்மலா. நான் போன வருசம் **A/L** எடுத்தனான். அங்கு ஊரில் இருந்தபோது நன்கு படித்தேன் எனக்கு நம்பிக்கை இருந்தது. நான் கம்பசுக்கு போவேன் என்று. என்ன செய்வது எல்லாம் பாழாய்ப் போச்சுது. இங்கு இடம்

பெயர்ந்து வந்து பிறகும் கூட எதிர் பார்த்தனான். என் பெற்றோரும் எதிர் பார்த்தனர். ஏமாற்றம்தான் மிச்சம். என்றாலும் எம்மைவிட இடம் பெயர்வால் பாதிக்கப்பட்டவர்கள் பட்டுக்கிருக்கும் வேதனையைப் பார்க்கும் போது எனக்கு இது அதிகமாக படவில்லை. இம்முறையும் (2001) A / L எழுத இருக்கின்றேன் இதிலாவது பாஸ் பண்ணுவன் என்ற புது நம்பிக்கையுடன். அவரது முயற்சி நம்பிக்கை 'கை' கூட எமது வாழ்த்துக்கள்

## ஆசான் ஒருவர் கூறுகையில்

இவர்களை சந்தித்து விட்டு திரும்பும் இடத்தில் ஒரு ஆசிரியர் வரவே அவரையும் பேட்டி காண விரும்பினோம். எனினும் நாம் தயங்கவே விபரம் உணர்ந்து அவர் என்ன கேட்கப்போறியள் பிள்ளையள்? எனவே நாம் விபரம் கூற அவ்வளவு தானே எப்பவும் உங்கட முயற்சிக்கு கை கொடுக்கத்தானே இருக்கிறம் என்று கூறிவிட்டு தொடர்கையில் நான் பெயர் கூற விரும்பவில்லை. நான் சாவகச்சேரி கோயிற் குடியிருப்படியில் இருந்தனான். A / L பிள்ளைகளுக்கு மற்ஸ் படிப்பிக்கின்றேன். என்னட்ட படிச்ச பிள்ளையள் கனக்க இந்த முறை பல்கலை அனுமதியையும், சித்திபெறவும் தவறி விட்டுதுகள். எனக்கும் சரியான கவலை.

இனி இதை நினைச்சு பலன் இல்லை. அதுகளையும் இந்த முறை பரீட்சை எடுக்கிறதுகளையும்தான் இனி கைகொடுத்து ஊக்குவிக்க வேணும். இங்கு வலிகாமம் வடமராட்சியில் எங்கட இடத்து பள்ளிக்கூடங்கள் இருக்குது சரியான கரைச்சலுக்கு மத்தியில்தான். இடம் நேரம் வசதி எண்டு எல்லாம் பெரிய பிரச்சினை. படிக்கிறதுக்கு குறிப்பா மத்ஸ், பயோ சயன்ஸ் செய்கிற பிள்ளைகளுக்கு தேவையான கருவி உபகரணங்கள் கூட இல்லை. சில இடத்தில பின்னேரமும் பாடசாலை இதால தூர இடங்களில் இருந்து வாறபிள்ளைகள் சரியா கஷ்டப்படுதுகள்.

இது மட்டுமே மற்றப்பிள்ளைகளுக்கு கூட பாடப்புத்தகங்கள் ஒழுங்காய் கிடைக்கேல ஒரு புத்தகத்தை ஐந்தாறு பிள்ளைகள் மாறி மாறி படிக்குதுகள். உடுப்புகளையும் விட்டுட்டு வந்ததால அதுவும் கரைச்சல். சாப்பாடும் சிலருக்கு கஷ்டம். இங்கு (பாடசாலைக்கு) வந்து மயங்கி விழுகிற பிள்ளைகளும் இருக்குதுகள். ரியூசனுக்கு ஒழுங்காய் போக முடியாது. பிள்ளைகளின்ர பாடு மட்டுமில்லை எங்கட பாடும் சிக்கல்தான் எங்களுக்கு இடம்பெயர்ந்த பிறகு ஒரு இரண்டாயிரம் தான் கிடைக்குது. நிவாரணமும் இல்லை ஊரிலெண்டால் காணிபூமி வருமானம் கிடைக்கும். இங்க அது ஒண்டும் இல்லை. சம்பளமும் எத்தனைக்கெண்டு சிலவளிக்கிறது. எல்லாம் காசுதான். சாமான்களுக்கும் விலை கூடிக் கொண்டு போகுது இனி வருத்தம் துன்பம் என்று வேறு கரைச்சல் என்று கூறி பெருமூச்செறிந்தார். அவருக்கு நன்றி கூறி விடை பெற்றோம்.

ஆம் இதுவரை இடம் பெயர்ந்த மக்களில் பலரையும் நாம் பேட்டி காணல் மூலம் சந்தித்தது. அவர்களது துயரங்களில் பங்கு கொண்டோம். இந்த வகையில் இடம் பெயர்வின் பின் இம்மக்களுக்கு உடனடியாக ஏற்பட்ட இடர்களையும் அவை தீர்ந்தவாறையும், அவர்களுக்கு கிடைத்த உதவிகளையும், அதில் அவர்கள் எதிர் கொண்ட சிக்கல்களையும் மற்றும் பல சம்பவங்களையும் சற்று நோக்குவோம்.

## இடம் பெயர்வுகளால் ஏற்பட்ட இதர பிரச்சினைகள்.

இங்கு இடம் பெயர்வு என்று நாம் எழுந்தமானமாக நாம் நோக்கினாலும் முன்னரே கூறியதற்கிணங்க நாம் நேரடியாக பங்குகொண்ட 2000ம் ஆண்டு இடப்பெயர்வே தென்மராட்சி மக்கள் இடப்பெயர்வையே இங்கு ஆராய்கின்றோம் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். இவ்வகையில் இடம்பெயர்ந்த மக்கள் ஏலவே கண்ட

பேட்டிகளில் கூறப்பட்டவை போன்று தமது சொந்த ஊர்களை ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூமியை தம்மை பெற்று தாலாட்டி சீராட்டி வளர்த்த பூமியை பிரிய மனமின்றி தமது உறவுகளை அயலவர்களை விட்டுப்பிரிய மனமின்றி தமது பெற்றோரை வயது முதிர்ந்தவர்களை வலது குறைந்தவர்களை கொண்டு வர முடியாமல் விட்டு வந்தவர்களின் மனத்துயரமே முதற்பிரச்சினையாகும். பின்னர் அவ்வாறு விட்டு வந்தவர்கள் இறந்த அல்லது காயமடைந்த செய்திகளை தவிர்க்க முடியாத வதந்திகளை நம்பி கலங்கியவர்களின் துயரம் அடுத்து தமது உயிருக்கு நிகரான அடையாள அட்டைகளை எடுத்துவர மறந்து தவறவிட்டவர்களின் கவலை அச்சம் இவற்றிற்கடுத்து தம் உழைப்பில் மீதப்படுத்தி சேர்த்த சொத்துக்களை இழந்தவர்களின் துயரம் இவற்றோடு தமது குழந்தைகளை சனநெருசலிடையே ஒரு சில மணி நேரம் தவற விட்டு தவித்தவர்களின் துயரமும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் துன்பதுயரம் இருந்த போதும் ஒரு சிலரது சோகக்கதைகள் சொல்லும்தரமன்று. இதன் பின்னர் ஒருவாறு பாதுகாப்பான (?) வடமராட்சி, வலிகாமம் பகுதிகளை வந்தடைந்த பின் தங்குமிடப் பிரச்சினை உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியோர் உடனடியாக சொற்பமே. கோயில்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்கியோரே அதிகம். அங்கு ஏற்பட்ட இட நெருக்கடி மற்றும் பசி அன்றாட வசதிகள் என்பனவும் அவர்களை வாட்டின அதிலும் மிக வறுமைக்குட்பட்ட ஏழைகள் பாடு வேதனைக்குரியது. ஒரு நேர உணவிற்கே துன்பப்பட்டவர்களும் உண்டு.

## நிவாரண உதவிகள்

இவ்வாறு இடப்பெயர்வின் பல இடர்களையும் அனுபவித்த மக்கள் களைத்த வேளையில் அவர்களுக்கு கை கொடுக்க பல உதவிக் கரங்கள் நீண்டன. அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தனித்தனியேயும்,

அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தனித்தனியேயும், இணைந்தும் இம்மக்களுக்கு உதவிகளை வழங்கின. இவ்வகையில் எந்தவொரு மனிதனாலும் தாங்கி கொள்ள முடியாத நீர்த்தாக பிரச்சினை. இதை U. N. H C. R என்னும் அரச சார்பற்ற அமைப்பு திறம்பட கவனித்தது. தொடர்ந்தும் தற்காலிகமாக மக்கள் ஏதோ ஒரு இடத்தில் தங்குவதற்கு தேவையான தரை விரிப்புக்களை (ரப்பர் சீற்) யும் வழங்கியது.

இந்த நேரத்தில் அரசின் சமைத்த உணவுத் திட்டத்தின் கீழ் மூன்று நாட்கள் தொடர்ந்து சமைத்த உணவு வழங்கப்பட்டது. பின் அவசர மற்றும் சாதாரண நோய்களுக்கான சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளை **I. C. R. C.** அமைப்பு செம்மையாக மேற்கொண்டது.

மேலும் மக்கள் இடம் பெயர்ந்து வந்த வேளையில் தேவையான சமையல் மற்றும் இதர உபகரணங்களைக் கொண்டு வராமையால் அவர்களின் உடனடித் தேவைக்காக பிளாஸ்டிக் வாளிகள், கோப்பைகள் மற்றும் பாய், போர்வை எனபல பாவனைப்பொருட்களும் சோப்பு, தரை விரிப்புகள், சவர்க்காரம் என இன்னோரன்ன உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களான யுனிசெப், **U. N. H. C. R., U. N. D. P.** முதலான நிறுவனங்கள் வழங்கின.

## உலர் உணவு

இவ்வாறு பல வெளிநாட்டு உதவித்தொண்டு நிறுவனங்கள் உதவி செய்தமையால் மக்களின் மனச்சுமை ஓரளவு குறைந்தது. அதே வேளை எமது உள்ளூர் தொண்டு அமைப்புகள் மற்றும் சமய நிறுவனங்களின் பணியும் கணிசமான அளவு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இந்து - கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் பலவும் மக்களுக்கு பல வகையிலும் நுட்பமான உதவிகளை வழங்கியது. இத்தகைய உடனடி உதவிகளால் ஓரளவு வழமைக்குத்திரும்பிய மக்களுக்கு அடுத்து ஆறுதல் தரும்படியாக அரசின் நிவாரண பணி காணப்பட்டது.

முதலில் வழங்கப்பட்ட நிவாரண உதவி எதுவித பாரபட்சமும் இன்றி சகல பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் வழங்கப்பட்டது. இதனால் மக்களின் உணவுப்பிரச்சினை ஓரளவு நிறைவு செய்யப் பட்டது. இந்த வகையில் ஒரு அங்கத்தவரை மட்டுமே கொண்ட குடும்ப அட்டைக்கு வழங்கப்பட்ட நிவாரண – உலர் உணவு விபரம் வருமாறு.

- ❋ ஒரு அங்கத்தவர் நிவாரண பெறுமதி ரூபா 336/=
  - ➢ அரிசி **6.75 K.g.**
  - ➢ சீனி **2 k.g.**
  - ➢ பருப்பு **550 k.g.**
  - ➢ பால்மா 1 பை
- ❋ இரு அங்கத்தவர்
  - ➢ அரிசி **15 K.g.**
  - ➢ சீனி **3 k.g.**
  - ➢ பருப்பு **800 k.g.**
  - ➢ பால்மா 1 பை
- ❋ மூன்று அங்கத்தவர்கள்
  - ➢ அரிசி **21.300 K.g**
  - ➢ சீனி **4.15 k.g.**
  - ➢ பருப்பு **1 k.g.**
  - ➢ பால்மா பை
- ❋ நான்கு அங்கத்தவர்
  - ➢ அரிசி 25.600 kg
  - ➢ சீனி 5 kg
  - ➢ பருப்பு **1.500 k.g.**
  - ➢ பால்மா 1 பை
- ❋ ஐந்து அங்கத்தவர்
  - ➢ அரிசி **32.550 K.g.**
  - ➢ சீனி **6 k.g.**
  - ➢ பருப்பு **2 k.g.**
  - ➢ பால்மா 1 பை

தலைவர் உதவி

## அரச, அரசசார்பற்ற, சமய நிறுவனங்களின் உதவி - சேவை

இவ்வாறு இன்னல்கள் பல சுமந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு பல உதவிகள் கிடைக்க அரசும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் மற்றும் பல சமூக சமய அமைப்புக்களும் பேர் உதவி புரிந்தன. அத்துடன் இடம் பெயர்ந்து ஒரு சில மாதங்கள் கழிந்த நிலையில் அரசின் உதவித்திட்டத்தின் கீழ் ரூபா இரண்டாயிரம் சகல இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இன்று யாழ் குடாநாட்டில் பெரும்பாலான குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் வெளிநாட்டுத் தொடர்பை கொண்டிருப்பதால் அங்கிருந்தும் கால தாமதமாகவேனும் பண உதவிகள் வந்து சேர்ந்ததையும் சுட்டிக்காட்டத் தக்கது. இவற்றை கூட இம்மக்கள் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள், அலைச்சல்கள் மற்றும் இதரப்பிரச்சினைகள் வேதனைக்குரியதொன்றே!

## அதிகம் துயர்படுத்திய இடர்கள் இவைதான்

இப்படியாக தமது பொருள் பண்டங்களை வருமான வழிகளை இழந்து பெரும் பொருளாதார நெருக்கீட்டை — ஒரு நேரத்து உணவிற்கும் வழியில்லாத நிலையில் இத்தகைய பல உதவிகள் நீக்கியபோதும் இதர பிரச்சினைகள் சில மக்களை மேலும் பல சிக்கலுக்குள்ளாக்கின. அவை பற்றி ஆராய முற்படும் இடத்து தொற்று நோய்கள், விறகு – எரிபொருள் பிரச்சினை, குடும்ப – உறவு முரண்பாடுகள் மற்றும் கல்வி முதலானவை பிரதானமாக தோன்றுவதைக் காணலாம். எனினும் அவற்றில் கூட ஒரு சில பிரச்சனைகளுக்கு வழி கிடைத்தது. இதற்கும் பல தொண்டர் நிறுவனங்களும்,

அரசும், ஏன்பரோபகாரிகள் கூட உதவிக்கரம் நீட்டியமை குறிப்பிடக்கூடியது.

## தொற்று நோய்களுக்கான பல காரணிகள்

இந்த வகையில் பாம் ஏறி விழுந்தவனை மாடு ஏறி மிதித்தால் போல இம்மக்களை வதைக்க இன்னல்களுள் தொற்று நோய்கள் முதன்மைப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

* போதிய இருப்பிட வசதியின்மை
* மலசலகூட வசதியின்மை
* குடிநீர்ப் பிரச்சினை.
* சத்துணவின்மை
* சரியான மருத்துவ உதவி - வசதியின்மை
* சுகாதார முறைகளை பின்பற்றாமை

விபர உதவி I.C.R.C., S.L.R.C., UNHCR, FORUT, ACTION N, GTZ, UNICEF

என தொற்று நோய்களுக்கான காரணங்கள் இத்யாதி இத்யாதி. மேலும் நாளடைவில் இவற்றிற்கு தீர்வாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது பற்றி யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி ஒருவர் குறிப்பிடுகையில் -- முதலில் அகதி முகாம்களில் தங்கிய மக்களையே நாம் கவனித்தோம். அவர்களுக்கு குடிநீர் பெறுவது சிரமம். எனவே நீர்த்தொட்டிகள் வைத்து சுத்தமான நீரைப் பெற வழி செய்தோம். அத்துடன் இருப்பிட வசதிகளும் எம்மால் இயன்ற அளவு மேற்கொள்ளப்பட்டன என்றார்.

## சமூக அமைப்புகள் விளக்குகின்றன.

இது விடயமாக மற்றுமொரு தொண்டு நிறுவனமான "அக்ஷன்" அமைப்பு பிரதிநிதியுடன் தொடர்பு கொண்டபோது நாம் விவசாய நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை கொடுக்கின்றோம். எனினும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் தேவையான பல உதவிகளை வழங்கியுள்ளோம். அவற்றுள் மலசலகூட வசதிகள் அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது

முகாம்களில் மட்டுமல்ல உறவினர் — நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள ஒரு சிலருக்கும் கிடைத்துள்ளது.

மேலும் இப்பிரச்சினைக்கு தீர்வாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (I. C. R. C.) மற்றும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் (S. L .R. C.) ஆகியனவும் நடமாடும் மருத்துவ உதவி மற்றும் ஆலோசனைகள் வழங்கியமையும் கடற் — பயணப் போக்குவரத்து உதவியும் குறிப்பிடத்தக்கது.

## விறகு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு

அடுத்து எரிபொருள் — குறிப்பாக விறகுப் பிரச்சினை என்னதான் உதவிகள் அடுக்கடுக்காய் கிடைத்தாலும் அவற்றை — குறிப்பாக உலர் நிவாரணப் உணவுப் பொருட்களை — சமைத்து உண்பதற்கு விறகு வேண்டுமே. ஆனால் அதையும் நிவாரணமாக பெற முடியாது. எனினும் தமது தேவையை நிறைவு செய்ய விறகை விலைக்கு வாங்கும் நிலையிலும் மக்களில் பலர் இல்லை. மறாக வெற்றுக்காணிகளில் உள்ள ஓலைகள் தடிகள், மட்டைகள் என்பவற்றைக் கூட பல இடங்களில் சென்று எடுக்க முடியாத நிலை காரணம் மிதி வெடிகள்.

இதையும் மீறித் தமது விறகுத்தேவை பணத் தேவைக்காக விறகு எடுக்க — வெட்டச்சென்றவர்களில் சிலர் தமது அங்கங்களை இழந்தும், சிறு, பெரு காயங்களுக்குள்ளாகிய சோகச்சம்பவங்களும் உண்டு. ஆக மொத்தத்தில் தம் வாழ்வை நகர்த்த முயன்று தாம் நகர முடியாத நிலை ஏற்பட்டது.

## விறகு விலை உயர்வும் அதன் விபரமும்

இந்த நிலையில் இடம் பெயர்ந்த மக்கள் எட்டாப்பேறும் விறகை விலைக்கு வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். ஏற்கெனவே வலிகாமம், மற்றும் வடமராட்சிப் பகுதி (இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பகுதி) களில் அப்பகுதி மக்களிற் சிலர் கூட விறகை

விலைக்கே வாங்கி உபயோகிக்கின்றனர். இதனால் இடம்பெயர்வின் பின் தேங்கிக் கிடந்த விறகுகள் "கிராக்கி" பெற்றன விலையும் அதிகரித்தது. விறகு தொடர்பான விபரம் வருமாறு.

| | இடம் பெயர்முன் (ரூபாய்) | இடம் பெயர்பின் (ரூபாய்) |
|---|---|---|
| ஒரு கிலோ காய்ந்த கொத்து விறகு | 3/= – 4/= | 5/= – 6/= |
| ஒரு தென்னை மட்டை கொம்பை | =/50 – 1/= | 1/= – 1.50 |
| ஒரு பொச்ச மட்டை (கொம்பை) | =/50 – 1/= | 1/= – 1.50 |
| ஒரு சோடி சிரட்டை | =/25 – =/50 | =/50– =/75 |

## இலகு அடுப்புக்கள்

இது இவ்வாறிருக்க ஒரு சில மக்களுக்கு "தூசி அடுப்பு" கைகொடுத்தமையும் உண்டு. இதில் அடுப்புக் கருவி ரூபா 70 – ரூபா 90 வரையும் மூலப்பொருளான உமி சில இடங்களில் இலவசமாகவும், விலைக்கும், மரத்தூசி ஒரு மூடை அல்லது சாக்கு ரூபா 10 வரையிலும் விற்கப்பட்டன. அத்துடன் சில வசதியான குடும்பங்கள் மண்ணெண்ணெய் அடுப்பு பாவித்தனர். இன்னும் சிலர் – இடம் பெயர்ந்தவர்கள் தான் இவர்கள் மின்சார அடுப்பிலும் சமைத்தனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது நிலைக்கேற்ப இப்பிரச்சினையை எதிர்கொண்ட போதும் பெருமளவான குடும்பங்கள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாயின. ஒரு நாள் தேவைக்கு சாதாரண குடும்பம் ஒன்றிற்கு ஒரு கிலோ முதல் இரண்டு கிலோ விறகு அதாவது ரூபா 15 தொடக்கம் 20 வரையிலான விறகு தேவைப்படுகின்றது. இதனால் சிலர் மூன்று வேளையும் பாண் உண்பதும் உண்டு.

## பிரதான பிரச்சினையாக குடும்ப உறவு முரண்பாடு.

இச்சிக்கலை அடுத்து இடம் பெயர்ந்த மக்களிடையே காணப்படும் பிரதான பிரச்சினை குடும்ப உறவு முரண்பாடுகள் இதைப்பின்னணியாக கொண்ட சீரழிவுகளும்.

அதாவது இம் மக்களின் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களின் அன்றாட அகதி வாழ்வு அவல வாழ்வாகியுள்ளது. ஏனெனில் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத இடத்தில் சில சிக்கல்கள் எழுவது இயல்பே.

## பட்டினி

அந்த வகையில் இடப்பெயர்வினால் நிர்க்கதி நிலைக்குள்ளான இவர்கள் வெறுப்பும் வேதனையும், பசியும், பட்டினியும் தம்மை வாட்ட தாம்தமது குடும்பங்களில் பிளவுகளை உண்டாக்கினர். இது உணவு, உடை மற்றும் இருப்பிட வசதியின்மை முதலானவற்றிலும், திருமணம், குழந்தைப்பேறு, மரணம் முதலானவற்றிலும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின.

## இட நெருக்கடி

மேலும் ஒரு குறிப்பிட்ட சிறு அளவிலான குடிசையில் பலர் தங்கியிருக்கும் போது பல பிரச்சனைகள் தோன்றுவதும் தவிர்க்கமுடியாததே அத்துடன் நீர்ப்பங்கீடு, குளிப்பிடங்கள், ஏன் மலசல கூடங்களில் கூடத்தான் தகராறுகள் ஏற்படுகின்றனவாம். இவ்வாறு சிறிய சிக்கல்கள் நீறுபூத்த நெருப்பாகி பின் கொழுந்து விட்டு எரிவது தான் கவலைக்குரியது.

# ஒழுக்க சீர்கேடு

மேலும் இப் பிரச்சனைகளினால் குடும்பங்கள் பிளவு படுமோ அது மிகவும் துன்பகரமாகி மேலும் சிக்கலுக் குள்ளாக்குகின்றது. அதாகப்பட்டது இக்குடும்பங்கள் ஒன்றாயிருக்கும் போதே நிதி நிலை மோசம் போதாக் குறைக்கு பிரிந்து மேலும் அதிக செலவை ஏற்படுத்து கின்றது. இதனால் இக்குடும்பங்களில் குழந்தைகள் — சிறுவர்கள் வளர்ச்சி — கல்வி மற்றும் நற்பண்புகள் கிடைக்கப் பெறாததோடு சமூக விரோத செயல்களில் ஈடுபடவும் வழிவகுக்கின்றது.

## சத்துணவின்மை

இதனையடுத்து போதிய சத்துணவின்றி குழந்தைகள் சீரழிய, போதிய கவனிப்பின்றி தமது தேவைகளை பூர்த்தி செய்ய சிறார்கள் பலரும் பொய், ஏமாற்று, திருட்டு என ஒழுக்க சீர்கேடுகளை நாடுகின்றனர். இதற்கு ஒரு சில பெற்றோர்களும் உடந்தை என்பது வேறு விடயம். இத்தகைய பல சம்பவங்கள் அடிக்கடி எமது யாழ் நகர்ப்பகுதியில் நடைபெற்று சிறுவர்கள் பலர் பிடித்து எச்சரிக்கப்பட்ட போதும் இன்னும் தொடர்வது விரும்பத்தகாதது. இது தவிர்க்க முடியாததென சிலர் நியாயம் (?) கூறும் போதும் இச்சிறார்களின் எதிர்கால வாழ்வு கவலைக்குரியதாக அதே வேளை சிந்திக்கப்பட வேண்டியதுமாகும். ஏனெனில் இது தொடர்ந்தால் சிறு வயதில் இப்படி வளர்ந்து பின் சர்வதிகாரிகளாக கொடுங்கோலர்களாக வாழ்ந்த முசோலினி, கிட்லர், பொல்பொட் முதலானவர்களை போல ஆகலாம். இவர்களைப் போலல்லாவிடினும் நமது சிறார்களும் பின் வன்முறையாளர்களாக வருவது தவிர்க்க முடியாததாகி விடும் எனவே இவற்றைத் தடுத்து எமது நாளை சந்ததியை நல்ல வழிப்படுத்த நாம் முனைவது அவசியமாகும். இது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

## பாடசாலை செல்லாத - செல்லமுடியாத நிலை - காரணம்

இவற்றைவிட இன்னும் பல இன்னல்களை இடம்பெயர்வு தந்துள்ளது. எத்தனையோ குடும்பங்கள் போதிய வசதியின்றி அடிக்கடி தமது இருப்பிடங்களை மாற்றி மாற்றி அமைத்தனர். இதனால் ஏகப்பட்ட செலவும் சிரமமும் ஏற்பட்டது. மேலும் இவர்கள் குடும்பத்தில் ஒருவர் சுக வீனப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டால் அது வேறு பிரச்சினை. மற்றது பாடசாலை செல்லும் மாணவர்களது இடர்பாடுகள். நேரத்திற்கு வெளிக்கிட முடியாமை, உணவு தயாராவதற்கு தாமதமும் அதனால் பசியுடன் சென்று மயங்கி விழுதல் சில இடங்களில் மாலை நேர பாடசாலை ஆகையால் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்ல முடியாமை மற்றும் மாலை நேரப் படிப்பிற்கு உதவுதல் குறைவு என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

## உழைப்பு ஏதும் அற்ற நிலை

மேலும் இம்மக்கள் அரசின் நிவாரண உதவிகள் மற்றும் பிற நிறுவனங்களின் உதவிகள் என்பனவற்றைக் கொண்டு வாழ்வை ஓட்டுகின்ற போதும் தமது மேலதிக தேவைகளுக்கு வழியேதுமற்ற நிலையில் - குறிப்பாக வறிய மக்கள் உழைப்புகள் அற்ற நிலையில் தம்மிடம் உள்ள நகைகளையே விற்றுப்பிழைக்கின்றனராம். இதுவும் எத்தனை நாட்களுக்கோ?

சோகத்தின் உச்சம்

சந்திரகாசை [illegible]

## சோகத்தின் உச்சம்
## தற்கொலை - விபத்து

இவை ஒரு புறம் இருக்க சோதனைகள் என மேற்கூறிய இடர்களை தாங்கினாலும் வேதனை தரும் சில இடர்கள் – தற்கொலை மற்றும் விபத்து மரணங்கள். ஆம் இடம் பெயர்ந்த மக்களின் அதி கூடிய வேதனையும் – சோதனையும் இவையே. தமக்கு இனி இவர்கள்தான் என நம்பி இருக்கும் குடும்ப தலைவர்களை பொறுப்புள் உறுப்பினர்களை – குழந்தைச் செல்வங்களை இழப்பது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்லவே. தற்கொலை வாழ்வின் விரக்தியால் விபத்து மரணங்கள், விதியின் சதியால், இவை கூட வறிய மக்களையே பெரிதும் பாதிக்கின்றன. இதனால் இச்சம்பவங்கள் ஏற்பட்ட குடும்பங்கள் மேலும் பல துன்பங்களை எதிர் கொள்ள நேரிடுவதுடன் எஞ்சி இருப்பவர்களும் விரக்தி நிலைக்கு உள்ளாகின்றனர்

## தீர்வுகள்

இது காறும் இடப்பெயர்வுகளின் இரக்கமற்ற இடர்களையும் இவை ஏற்படுத்திய பல இன்னல்களையும் – அவற்றினால் துயர்படும் மக்களின் இன்னல்களையும் கண்டோம். அத்துயர் தீர்த்த உதவிக்கரங்களின் பணிகளையும் பார்த்தோம்.

இனி இந்நூலை நிறைவு செய்யும்படியாக இடம் பெயர்ந்த மக்களின் இன்னல்களை முடிந்தளவு தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நோக்குவோம்

## போர்

இந்த வகையில் இடப்பெயர்வு என்பது முன்னிலையில் நிற்கின்றது. இதற்கு காரணம் வீண்

உயிரழிவுகளையும், பொருளழிவுகளையும் உண்டுபண்ணும் கொடிய யுத்தமாகும் இத்தகைய போர் நடவடிக்கைகள் இன, மத, மொழி பேதமின்றி எல்லோரையும்தான் பாதிக்கின்றது. எனவே இக்கொடிய போர் ஒழிய வேண்டும்! எங்கும் சமத்துவம் நிலவவேண்டும்!! அதுதான் மானிடம்!!

## இருப்பிடம்

இதற்கு அடுத்து இடப்பெயர்வுகளால் ஏற்படும் — ஏற்பட்டுள்ள இடங்களுக்கு தீர்வுகள் பற்றி எமது கருத்துக்களுடன் ஒன்றிய — இடம் பெயர்ந்த மக்களின் கருத்துக்களையும் ஒருங்கே காண்போம். அந்த வகையில் இருப்பிட வசதி. இவ்வசதி குறைபாடு முக்கியமானதொரு பிரச்சினையாகும் இதற்கு உதவி செய்யும் நிறுவனங்கள் எல்லோருக்கும் ஒரேயளவான குடிசைகளையே (அகதி முகாம்களில்) அமைக்கிறது. இதனால் ஒரு குடும்பத்தில் பல பேரைக்கொண்டவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். எனவே இப்பணியில் ஈடுபடும் உதவும் அமைப்புக்கள் குடும்ப ஆட்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ள வேண்டும்.

## குடிநீர்

அடுத்து குடிநீர் வழங்கும் சில இடங்களில் இந்நீர் வீணடிக்கப்படுகின்றது. முகாம்களில் பெரிய நீர் கொள்கலன்களில் வைக்கப்படும் நீர் கவனிப்பார் இன்றி வெளியேறுகின்றது. வெளியேற்றப்படுவதும் உண்டு, உதாரணமாக சிறுவர்கள் குடிநீரை பிறதேவைகளுக்கு அல்லது விளையாட்டிற்கு பயன் படுத்துதல். எனவே இதுவும் தடுக்கப்பட்டு குடிநீரை உரிய முறையில் சிக்கனமாக பேண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதன் மூலம் பலருடைய குடிநீர் தேவை பூரணமாக பூர்த்தி செய்யப்படும். முகாம்களில் குடிநீர் இருக்கும் போதே பிற இடங்களில், கோயில், அயல் வீடுகளில் நீரள்ளிச்செல்லும் சிரமமும் குறையும்.

அடுத்த பிரச்சினையாக மலசலகூடம். இதுவும் பிரதானமான குறைபாடுகளில் ஒன்று அதிக மக்கள் உள்ள முகாம்களில் குறைந்தளவு மலசலகூடம் இருப்பதால் நெருக்கடி நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததே. எனவே இதையும் கவனத்தில் கொள்ளல் அவசியமாகும். அத்துடன் முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் உரிய முறைப்படி பேணப்படாததால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாயும் தெரிவிக்கப் படுகின்றது. இதை உதவும் அமைப்புகள் பராமரிப்பதோடு மக்களும் பொறுப்போடு செயல் படவேண்டும்

## மருத்துவ வசதியின்மை

மேலும் பல காரணிகளாலும் ஏற்படும் தொற்று நோய்களை தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் அவசியம். இதற்கு முகாம்கள் தோறும் சென்று பாமர மக்களுக்கு உரிய முறையில் அறிவித்தல்களை வழங்கும்படி மேல படுத்தப்படவேண்டும். இப்போது சில அமைப்புகள் அப்பணியை செய்கின்றன என்னும் இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். சுகாதார காரணிகளை பின்பற்ற வற்புறுத்த வேண்டும். அத்துடன் இலகுவில் மருத்துவ வசதிகளை பெறும் வழிகளும் கிடைக்க வழி வேண்டும்.

## போஷாக்கின்மை

இதற்கு சத்துக்குறைவும் காரணமாகின்றது. வறுமைக்கு கோட்பட்ட மக்களின் குழந்தைகள், சிறார்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டோரில் போஷாக்கின்மை குறைவு கவலை யளிப்பதாக யாழ் வைத்தியசாலை மற்றும் அரச சார்பற்ற வைத்திய பிரிவு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இதற்கு வன்னி மற்றும் வவுனியாவில் உள்ளது போன்று சத்துணவுத்திட்டம் இலைக் கஞ்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் வேண்டும். இதற்கு வடமாளில இந்து மாமன்றம் ஓர் சிறந்த உதாரணமாக

உள்ளது போன்று சத்துணவுத்திட்டம் இலைக் கஞ்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் வேண்டும். இதற்கு வடமானில இந்து மாமன்றம் ஓர் சிறந்த உதாரணமாக செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

## கல்வி

இவ்வகையில் முக்கியம் பெறும் மற்றுமொரு பிரச்சினை – கல்வி – முகாம்களில் வாழும் சிறார்களில் பலர் கல்வி கற்கச் செல்வதில்லை என்பதைவிட செல்லமுடியாத நிலை என்பதே பொருத்தம். இதற்கு அவர்களது குடும்ப நிலையே காரணம் தமது சொந்த ஊர்களில் கூட வறுமைப்பட்ட நிலையிலும் ஏதோ சமாளித்து பாடசாலை போ இச்சிறார்கள் இன்று வீணான பொழுதை "மாபிள்" அடிப்பதிலும், பிற விளையாட்டுக் களிலும் கழிக்கின்றனர். இதனால் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. இத்துடன் பொய், திருட்டு, ஏமாற்று வித்தைகளிலும் சிறுவர்கள் ஈடுபடுவதையும் காண முடிகின்றது. எனவே இவற்றை தடுக்க கல்வி – நற் பண்புகள் புகட்டுதல் அவசியம் எனவே முகாம்கள தோறும் சத்துணவுத்திட்டங்கள் மூலம் சிறார்களை ஊக்குவித்து கல்வி நடவடிக்கைகளை ஊட்ட வேண்டும். இதற்கு பொதுக்கல்வி நிலையம் அமைப்பது சிறந்த வழி இதற்கு முகாம்களில் உள்ள படித்த பெரியார்கள் பெற்றோர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளும் கை கொடுக்க வேண்டும். இவர்கள் முன்வர சமூக நிறுவனங்கள் முடீட வேண்டும். வருவார்களேயானால் பரோபகாரிகளின் உதவி கிட்டும்.

## இடம் பெயர்ந்தோரும் முயற்சிக்க வேண்டும்

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு ஏற்படும் இடர்களை குறிப்பாக முகாம்களில் வாழும் மக்கள் தாம் எதிர்கொள்ளும் இன்னல்களை ஆராய்ந்து பிறருடன் ஆலோசித்து இலகுவானதும், சிறந்ததுமான தீர்வை

நாடவேண்டும். முன்கூறப்பட்ட பிரச்சினைகளுடன் விறகு – எரிபொருள், மிதிவெடி, நுளம்பு மற்றும் விஷஜந்துக்கள், குடும்ப – உறவுச் சச்சரவுகள் என இத்யாதி, இத்யாதி பிரச்சினைகளை தாம்தாம் தீர்த்துக்கொள்ளவேண்டும். இதற்கும் பிறரை எதிர்பார்க்க கூடாது. ஆனாலும் ஒரு சில இடர்களை அவர்களால் மட்டும் முடியாதது தான் அவற்றை உரிய அதிகாரிகள் கருணையுடன் கவனத்தில் கொள்ள வேண்டும். அது அவர்களின் கடமையும் கூட. உதாரண மாக நிவாரண விநியோகங்களின் இடம்பெயர்ந்த மக்களுக்கென அரச – பிற உதவி நிறுவனங்களும் வழங்கும் பொருட்களை தரம் அற்றதாக பாவனைக்கு தேவையானதாக அதைக்கூட நிறை குறைத்து வழங்குவ தாக பலரும் குறை பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'இடம்பெயர்வுகள் இனி வேண்டாம்' என்ற தலைப்பிலான இந்நூலில் இடம்பெயர்வின் கொடுமைகளை, அதனால் ஏற்பட்ட துயரங்களை – பின்னர் வந்து தங்கிய இடத்தில் எதிர் கொண்ட இடர்களை வஞ்சிக்கப்பட்ட வற்றை என பலவற்றையும், அவற்றிற்கான தீர்வாக சில ஆலோசனைகளையும், இடம்பெயர்ந்த மக்களின் அவர்களின் அவலங்கள் என்று பட்டியலிட்டு பார்த்துள்ளோம்.

இவை எமது சிற்றறிவிற்கேற்ற வகையில் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டது. எனவே இதில் தவறுகள், குறைகள் எவையிலும் இருப்பின் பொறுத்துக்கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம். மேலும் இவ் இடம்பெயர் அவலத்தினை நாமும் அனுபவித்ததால் பெரும்பாலான தரவுகளை அனுபவங்களின் மூலமே தந்துள்ளோம். அத்துடன் இடம்பெயர்ந்த மக்களுடன் உரையாடிய தகவல்களும் பத்திரிகை, சஞ்சிகைகள் மூலமான சில கருத்துக்களை சேர்த்துள்ளோம் என்று கூறி நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.



வாழ்வுதரும் தென்னை பனை, கமுகும், சோறு தரும் நெல்லும், தேனூறும் மா, பலா, வாழை காசு தரும் தேயிலையும் என்று எங்கும் பசுமை நிறைந்த எங்கள் தேசம்.



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்

யாபேருக்கும் சிங்கள - தமிழ் சித்திரைப்

புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

மீண்டும் பழைய இடத்தில்

## விக்னேஸ்வரா களஞ்சியம்,
## வெதுப்பகம்,
## தொலைத் தொடர்பு நிலையம்

புத்தூர் சந்தி, கண்டி வீதி, மீசாலை.

எம்மிடம் சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் உடனுக்குடன்

மலிவாக, தரமாகப் பெற்றுக் கொள்ள இன்றே நாடங்கள்.

## விக்னேஸ்வரா களஞ்சியம்


விரைவில்

மீண்டும் எமது வெதுப்பகம் வழமைபோல் இயங்கவுள்ளது.

இன்றே தொடர்ப கொள்ளுங்கள்

உங்கள் உள்ளூர், வெளியூர் உறவுகளுடன் உரையாட

எங்கள் தொலைபேசிச் சேவை இலக்கங்கள்



உள்ளூர், 070 -212792

வெளியூர் 0094 -70 –212792

VIGNESWARA KALANCHIYAM

MEESALAI.

**நூல் வெளியீடு சிறப்புற வாழ்த்துகிறோம்**

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

**பழமுதிர்சோலை ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

உங்கள் குடும்பத்திற்குத் தேவையான சகல பலசரக்குப் பொருட்களையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள

இன்றே நாடுங்கள்

**பழமுதிர்சோலை களஞ்சியம்**

கண்டி வீதி, மீசாலைச் சந்தி, மீசாலை.

நூல் வெளியீடு சிறப்புற வாழ்த்துகிறோம்

அஸீகரன் ஸ்ரோர்ஸ், மீசாலை

அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்கள். மரக்கறி வகைகள். மற்றும் பாடசாலை உபகரணங்கள் எது வேண்டுமானாலும் எம்மிடம் மலிவாகத் தரமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**அஸீகரன் ஸ்ரோர்ஸ்**

கேணியடி வீதி, காளி கோவிலடி, மீசாலை.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**மணி ஜுவல்லர்ஸ்**

அன்று சாவகச்சேரியில் இன்று சங்கானையில்

நங்கையர் விரும்பும் நவநாகரீக அணிகலன்கள்

தங்கையர் மகிழும் தரம் நிரந்தரம்

உங்கள் குடும்பத்தின் நகைத் தேவைகளை

எங்கள் நிறுவனம் பூர்த்தி செய்யும்

**மணி ஜுவல்லர்ஸ் அன்ட்**

**ஈசன் ஜுவல்லர்ஸ்**

அழகுக்கு அழகுசெய் அணிகலன்கள்


அசல் 22 கரட்டில் குறித்த தவணையில்

இன்றே நாடுங்கள்

**மணி ஜுவல்லர்ஸ்**

**இணை நிறுவனம்**

**ஈசன் ஜுவல்லர்ஸ்**



சித்திரை
வாழ்த்துக்கள்

# உதயம்

மளிகை மாளிகை
மீண்டும் மீசாலையில்
உங்களுக்கு
உடலுக்குடன்
சகல மளிகைச்
சரக்குகளும்
நியாய விலையில்
தரம் நிரந்தரம்
நூல் சிறக்க
வாழ்த்துகின்றோம்.

புதுவருட வாழ்த்துக்கள்

# கிருஸ்ணாஸ் களஞ்சியம்

சாவகச்சேரியில் அன்று
மீசாலையில் மீண்டும்
எமது ஸ்தாபனம்
பலசரக்குப் பொருட்கள்,
பாடசாலை
உபகரணங்கள்
மற்றும் பல இன்றே
நாடுங்கள்
புதுப் பள்ளிக்கூடம்
அருகே மீசாலை.

# ஏ.கே. இன்ஸ்ரிரியூட்

இன்டஸ்றீஸ்

அப்போ நுணாவிலில் இப்போ இனுவில்
கொக்குவிலில்

கணிதப் பிரிவு மட்டும்! கலைப்பிரிவு மாட்டோம் !!
புள்ளிகள் "பார்த்துப்" போடுவோம் !
(புள்ளிகளைப்) பாராமல் போடுவோம் !
எட்டு - ஐந்து = மூன்று மணி நேரமும்
மாலையிலும் இனுவிலில் ஆறுதலாய்
காலையில் கணிதம் கற்கலாம் வருக வருக.......
விஞ்ஞானப் பிரிவு இல்லை விரைந்து வருக !
வர்த்தகப் பிரிவும் இல்லை ஆனால் வர்த்தகமே கண் !!
பத்திரிகையில் பெயர்வர எழுதி அனுப்புவோம்
அனுமதிகள் அதிகமில்லை அனைவரும் வருக !
மேலதிக விபரங்களைத் "தெள்வாக" அறியநாடுங்கள் இன்று

*து.மு.(பெயர் பேப்பரில் வரும்) கோண்டாவில்,*
*கொக்குவில், மட்டுவில் அன்று !*
*வில்லென்றாலே வில்லன்கள் தானோ..........?*

THULIRCHAL
NO.47, Martin

# நன்றி பெறும் நறுமணம்

இடம் பெயர்வு(கள்) இனி வேண்டாம் என்ற இந்நூலினை உருவாக்க பலவழிகளிலும் ஒத்தாசை புரிந்த அன்பர்கள் அனேகர். இதற்கு முன் ஊக்கம் தந்தோரும் கல்வி உலகிலும் எழுத்துலகிலும் வரவேற்று வளர்த்தோரும் பலர் இவர்கள் யாவருக்கும் அன்பனின் அன்பு நன்றிகள் என்றும் உரித்தாகும்.

இந்த வகையில் ஆசிரியை பேபிரீச்சர், றதிரீச்சர், நல்லம் ரீச்சர், கனகம்மா ரீச்சர், தாரணி ரீச்சர், சிவக்கொழுந்துச் ரீச்சர், உமையம்மா ரீச்சர்,சுந்தர மூர்த்தி ரீச்சர், ஆகிய அன்றைய இன்றைய கல்வி உலகின் ஆசிரியைகளும். ஐயா சேர், அப்பப்பா வாத்தியார், (திருவாளர் சடாச்சாரம்), விநாயகமூர்த்தி சேர், லோகநாதன் சேர், காங்கேஸ் சேர், ஈழநேசன் சேர், ஆகியோர் அன்றைய இன்றைய கல்வி உலகின் ஆசிரியர்களுக்கும்

எழுத்துலகில் திரு.விஜயசுந்தரம் மற்றும் பத்திரிகை உலகின் வழிகாட்டிகளும், வாசகர்களுக்கும்,என்றும் ஊக்கிவிக்கும் யாபருக்கும் இம் முயற்சிக்கு பலவாறு உதவும் அனைவருக்கும் தகவல் திரட்டலில் உதவிய அமைப்பின் பொறுப்பாளர்கள், உதவியாளர்கள், மற்றும் மிகக்குறுகிய காலத்தில் சிறப்பாக வடிவமைத்து பதிப்பித்த தாரணி பதிப்பகத்தினருக்கும், விளம்பர அனுசரணைகள் வழங்கிய வர்த்தகர்கள், விழாவிற்கான சகல ஒத்துழைப்பும் நல்கியோர், மற்றும் குறிப்பிட்ட தவறிய அனைத்து அன்பர்கள், மற்றும் நன்பர்கள், வாசகர்கள், யாபேருக்கும் என் அன்பு கலந்த நன்றிகள். எனது படைப்புகளுக்கு படங்களை வரைந்து ஆஸ்தான ஓவியராக ஒத்துழைப்பு நல்கும் சனாதிபதியாக விருதுபெற்ற யாழ்ப்பாண ஓவியன் நண்பர் திரு நா. ஜீவன் அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

நன்றி

# சமர்ப்பணம்

இடம்பெயர்வு(கள்) இனி வேண்டாம் என்ற இந்நூலினை 2000ஆம் ஆண்டு தென் இடம்பெயர்வில் தன்னுயிர் நீத்த தமிழர் தம் கலைகளின் காவலருள் மீசாலை மண்ணின் அமரர் திரு எஸ். கிருஷ்ணசாமி ஓய்வுபெற்ற தபாலதிபர் அவர்களுக்கும், மண்ணுக்காய் மண்ணுக்குள் உறங்கும் மிசலையின் மைந்தன் - எனது ஆத்ம நண்பன் அமரர் கிருஸ்ணபிள்ளை குருபரன் அவர்களுக்கும் எனது தந்தையார் அமரர் கே. நாகேந்திரன் அவர்களுக்கும் இந்நூலைக்காணிக்கையாக்குகிறேன்

வணக்கம்

சுபம்